இந்திய அரசு
இந்திய வானிலை ஆய்வு துறை
மண்டல வானிலை ஆய்வு மையம்
6, கல்லூரி சாலை
சென்னை - 600006
தொலைபேசி : 044- 28271951

GOVERNMENT OF INDIA
INDIA METEOROLOGICAL DEPARTMENT
Regional Meteorological Centre
6, College Road
Chennai–600006
Phone: 044- 28271951

நாள்: 07-12-2022	நேரம்:1300 மணி

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளுக்கான தினசரி வானிலை அறிக்கை

கடந்த 24 மணி நேரத்திற்கான வானிலை தொகுப்பு:

தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மழை பெய்துள்ளது. புதுவை, காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவியது.

கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு (சென்டிமீட்டரில்): ஏதுமில்லை.

வெப்பநிலை பற்றிய குறிப்பு :

குறைந்தபட்ச வெப்பநிலை : பெரியகுளம் மற்றும் நாமக்கல்லில் 19.0 டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளது.

24 மணி நேர வெப்பநிலை மாறுதல்: (குறைந்தபட்ச வெப்பநிலை)

மிகவும் குறைந்துள்ளது (- 4.1° செல்சியஸ் அல்லது அதற்கு குறைவாக)	--------------
கணிசமாக குறைந்துள்ளது (- 2.1° செல்சியஸ் முதல் - 4.0° செல்சியஸ் வரை)	--------------
கணிசமாக அதிகரித்துள்ளது (2.1° செல்சியஸ் முதல் 4.0 ° செல்சியஸ் வரை)	--------------
மிகவும் அதிகரித்துள்ளது (4.1° செல்சியஸ் அல்லது அதற்கும் அதிகம்)	--------------
பெரிய மாற்றமில்லை (-2.0° செல்சியஸ் முதல் 2.0° C வரை)	அனைத்து மாவட்டங்களில்

இயல்பு நிலையிலிருந்து வெப்ப அளவின் வேறுபாடு: (குறைந்தபட்ச வெப்பநிலை)

இயல்பை விட மிக மிக அதிகம் **(5.1 ° செல்சியஸ் அல்லது அதற்கு அதிகம்)**	---------------
இயல்பை விட மிக அதிகம் (3.1 ° செல்சியஸ் முதல் 5.0 ° செல்சியஸ் வரை)	வேலூர் மாவட்டத்தில்
இயல்பை விட அதிகம் (1.6° செல்சியஸ் முதல் 3.0° செல்சியஸ் வரை)	சென்னை, கோயம்புத்தூர், கடலூர், தர்மபுரி, மதுரை, தஞ்சாவூர், திருப்பத்தூர், திருச்சிராப்பள்ளி, திருவள்ளூர், ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள்
இயல்பை விட குறைவு (- 1.6° செல்சியஸ் முதல் - 3.0° செல்சியஸ் வரை)	---------------
இயல்பை விட மிக குறைவு (- 3.1 ° செல்சியஸ் முதல்- 5.0° செல்சியஸ் வரை)	---------------

UTL MEDIA
உள்ளாட்சித் தகவல்
www.ullatchithagaval.com

இயல்பை விட மிக மிக குறைவு **(- 5.1 ° செல்சியஸ் அல்லது அதற்கு கீழ்)**	---------------
இயல்பு நிலை **(-1.5° செல்சியஸ் முதல் 1.5 ° செல்சியஸ் வரை)**	**மற்ற ஏனைய மாவட்டங்களில்**

<u>அடுத்த 5 தினங்களுக்கான வானிலை முன்னறிவிப்பு மற்றும் எச்சரிக்கை:</u>

நேற்று (06.12.2022) தென்கிழக்கு வங்கக் கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து நேற்று மாலை தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்து, இன்று (07.12.2022) காலை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மேலும் வலுப்பெற்று தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்கக்கடலில் நிலைகொண்டுள்ளது. இது மேலும் மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து 08-09-ம் தேதிகளில் வடதமிழகம்-புதுவை மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகளை ஒட்டி நிலவக்கூடும்.

<u>**07.12.2022:**</u> **தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.**

<u>**08.12.2022:**</u> **தமிழக கடலோர மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களிலும், உள் தமிழக மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், திருச்சிராப்பள்ளி, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.**

<u>**09.12.2022:**</u> **தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி பகுதிகளில் ஓரிரு இடங்களில் அதி கனமழையும், சென்னை, திருவள்ளூர், இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மற்றும் கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், தர்மபுரி, சேலம், நாமக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை, திண்டுக்கல் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.**

<u>**10.12.2022:**</u> **தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.**
கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், வேலூர், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், நீலகிரி, ஈரோடு, சேலம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

<u>**11.12.2022:**</u> **தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.**
திருவள்ளூர், காஞ்சிபுரம், இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, கள்ளக்குறிச்சி, சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர் மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

<u>சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு:</u>

அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். ஒருசில இடங்களில் லேசான/ மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 29-30 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 23-24 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும்.

உள்ளாட்சித் தகவல்
www.ullatchithagaval.com

அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். ஒருசில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 29 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 23 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும்.

கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு (சென்டிமீட்டரில்): ஏதுமில்லை.

மீனவர்களுக்கான எச்சரிக்கை:

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகள்: **சூறாவளிக்காற்று மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 70 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். பிறகு காற்றின் வேகம் படிப்படியாக குறைந்து 08.12.2022 அன்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.**

தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள்: சூறாவளிக்காற்று மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 70 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். காற்றின் வேகம் படிப்படியாக உயர்ந்து 07.12.2022 மாலை மணிக்கு 60 முதல் 70 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 80 கிலோ மீட்டர் வேகத்திலும் 08.12.2022 காலை முதல் மணிக்கு 70 முதல் 80 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 90 கிலோ மீட்டர் வேகத்திலும் 08.12.2022 மாலை முதல் 09.12.2022 காலை வரை மணிக்கு 80 முதல் 90 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 100 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். அதன் பிறகு காற்றின் வேகம் படிப்படியாக குறையக்கூடும்.

தமிழக- புதுவை மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகள், வட இலங்கை கடலோரப்பகுதிகள்: சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்தில் 08.12.2022 அன்று காலை தொடங்கி காற்றின் வேகம் படிப்படியாக உயர்ந்து 08.12.2022 மாலை முதல் 09.12.2022 மாலை வரை மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 70 கிலோ மீட்டர் வேகத்திலும், 09.12.2022 மாலை முதல் 10.12.2022 காலை வரை மணிக்கு 70 முதல் 80 கிலோ மீட்டர் வேகத்தில் வேகத்தில் இடையிடையே 90 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். பிறகு காற்றின் வேகம் படிப்படியாக குறைந்து 10.12.2022 மாலை மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 70 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். அதன் பிறகு காற்றின் வேகம் படிப்படியாக குறையக்கூடும்.

மன்னார் வளைகுடா பகுதிகள்: 08.12.2022 மாலை முதல் 09.12.2022 மாலை வரை சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். 09.12.2022 மாலை முதல் 10.12.2022 காலை வரை சூறாவளிக்காற்று மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 70 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். அதன் பிறகு காற்றின் வேகம் படிப்படியாக குறையக்கூடும்.

மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு: mausam.imd.gov.in/chennai இணையதளத்தை காணவும்.

பா. செந்தாமரை கண்ணன்
இயக்குனர்
தென் மண்டல தலைவருக்காக
மண்டல வானிலை ஆய்வு மையம், சென்னை

UTL
www.ullatchithagaval.com

01.10.2022 முதல் 07.12.2022 வரை பெய்த மழை அளவு

	பதிவான மழை (மி.மீ)	இயல் பு மழை (மி.மீ)	வேறுபாடு (%)
அரியலூர்	296.8	419.2	-29
செங்கல்பட்டு	537.0	618.1	-13
சென்னை	665.6	714.5	-7
கோயம்புத்தூர்	369.5	305.5	21
கடலூர்	541.0	583.3	-7
தர்மபுரி	300.7	290.2	4
திண்டுக்கல்	448.0	399.9	12
ஈரோடு	453.4	280.7	62
கள்ளக்குறிச்சி	291.7	384.2	-24
காஞ்சிபுரம்	538.5	514.9	5
கன்னியாகுமரி	514.6	490.1	5
காரைக்கால்	647.6	832.8	-22
கரூர்	280.1	278.6	1
கிருஷ்ணகிரி	298.3	258.7	15
மதுரை	393.8	329.4	20
மயிலாடுதுறை	837.5	730.1	15
நாகப்பட்டினம்	544.7	758.3	-28
நாமக்கல்	349.7	249.4	40
நீலகிரி	323.4	448.3	-28
பெரம்பலூர்	312.5	376.7	-17
புதுச்சேரி	596.2	714.8	-17
புதுக்கோட்டை	265.6	325.9	-18
ராமநாதபுரம்	351.0	437.8	-20
ராணிப்பேட்டை	291.4	353.9	-18
சேலம்	297.9	300.9	-1
சிவகங்கை	350.0	362.7	-4
தென்காசி	356.0	409.3	-13
தஞ்சாவூர்	381.3	478.3	-20
தேனி	371.6	327.4	14
திருநெல்வேலி	344.2	427.8	-20
திருப்பத்தூர்	298.8	240.3	24
திருப்பூர்	350.6	278.0	26
திருவள்ளூர்	491.1	553.1	-11
திருவண்ணாமலை	353.6	388.3	-9
திருவாரூர்	402.2	594.5	-32
தூத்துக்குடி	283.0	382.0	-26
திருச்சிராப்பள்ளி	247.4	327.6	-24
வேலூர்	220.3	329.7	-33
விழுப்புரம்	384.3	450.0	-15
விருதுநகர்	376.1	351.1	7
தமிழ்நாடு மற்றும் புதுவை	367.3	384.8	-5

UTL MEDIA
www.ullatchithagaval.com





UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com



UTL MEDIA

உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com



UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com



கனமழை எச்சரிக்கை - 07-12-2022
நாள் 2 08-12-2022
India Meteorological Department
Regional Met Centre, Chennai
திருவள்ளூர்
சென்னை
வேலூர்
இராணிப்பேட்டை
காஞ்சிபுரம்
கிருஷ்ணகிரி
திருப்பத்தூர்
திருவண்ணாமலை
செங்கல்பட்டு
விழுப்புரம்
தர்மபுரி
புதுச்சேரி
கள்ளக்குறிச்சி
சேலம்
ஈரோடு
நீலகிரி
கடலூர்
நாமக்கல்
பெரம்பலூர்
அரியலூர்
மயிலாடுதுறை
கோயம்புத்தூர்
திருச்சிராப்பள்ளி
திருப்பூர்
கரூர்
காரைக்கால்
தஞ்சாவூர்
திருவாரூர்
திண்டுக்கல்
புதுக்கோட்டை
நாகப்பட்டினம்
சிவகங்கை
தேனி
மதுரை
விருதுநகர்
இராமநாதபுரம்
தென்காசி
தூத்துக்குடி
திருநெல்வேலி
கன்னியாகுமரி
UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com
WARNINGS
NO WARNING (NO ACTION)
WATCH (BE UPDATED)
ALERT (BE PREPARED)
WARNING (TAKE ACTION)
RAINFALL
Heavy Rainfall (64.5 to 115.5) mm
Very Heavy Rainfall (115.6 to 204.4) mm
Extremely Heavy Rainfall > 204.4 mm
Leaflet



UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com



UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com



கனமழை எச்சரிக்கை - 07-12-2022
India Meteorological Department
Regional Met Centre, Chennai
நாள் 5 11-12-2022
திருவள்ளூர்
சென்னை
வேலூர்
இராணிப்பேட்டை
காஞ்சிபுரம்
கிருஷ்ணகிரி
திருப்பத்தூர்
திருவண்ணாமலை
செங்கல்பட்டு
விழுப்புரம்
தர்மபுரி
புதுச்சேரி
கள்ளக்குறிச்சி
சேலம்
ஈரோடு
நீலகிரி
கடலூர்
நாமக்கல்
பெரம்பலூர்
அரியலூர்
மயிலாடுதுறை
கோயம்புத்தூர்
திருச்சிராப்பள்ளி
திருப்பூர்
கரூர்
காரைக்கால்
தஞ்சாவூர்
திருவாரூர்
திண்டுக்கல்
புதுக்கோட்டை
நாகப்பட்டினம்
சிவகங்கை
தேனி
மதுரை
விருதுநகர்
இராமநாதபுரம்
தென்காசி
தூத்துக்குடி
திருநெல்வேலி
கன்னியாகுமரி
WARNINGS
NO WARNING (NO ACTION)
WATCH (BE UPDATED)
ALERT (BE PREPARED)
WARNING (TAKE ACTION)
RAINFALL
Heavy Rainfall (64.5 to 115.5) mm
Very Heavy Rainfall (115.6 to 204.4) mm
Extremely Heavy Rainfall > 204.4 mm
Leaflet

வகைப்பாடு

வட தமிழக மாவட்டங்கள்	சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, சேலம், தர்மபுரி, நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர்
தென் தமிழக மாவட்டங்கள்	ராமநாதபுரம், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, தேனி, கன்னியாகுமரி, சிவகங்கை, விருதுநகர், திண்டுக்கல், மதுரை
உள் தமிழக மாவட்டங்கள்	வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர், சிவகங்கை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், மதுரை, தென்காசி, கள்ளக்குறிச்சி
வடஉள் தமிழக மாவட்டங்கள்	வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர்.
தென்உள் தமிழக மாவட்டங்கள்	சிவகங்கை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், மதுரை, தென்காசி.
கடலோர தமிழக மாவட்டங்கள்	சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி.
வட கடலோர தமிழக மாவட்டங்கள்	சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, மயிலாடுதுறை.
தென் கடலோர தமிழக மாவட்டங்கள்	ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி
டெல்டா மாவட்டங்கள்	தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை
மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள்	நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், திருப்பூர், தென்காசி, விருதுநகர்

UTL MEDIA
உள்ளாட்சித் தகவல்
www.ullatchithagaval.com

மழைப்பொழிவின் பரவல்:

(விழுக்காடு) மழை பதிவான இடங்கள்	வகைப்பாடு
76-100	பெரும்பாலான
51-75	அநேக
26-50	ஒருசில
1-25	ஓரிரு
மழையில்லை	வறண்ட

மழைப்பொழிவின் தீவிரம்: (செ.மீ.)

1 செ.மீ. வரை	லேசான மழை
2-6	மிதமான மழை
7-11	கனமழை
12-20	மிக கனமழை
≥ 21	அதி கனமழை